# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## June 2, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. உச்சநீதிமன்றத்துக்கு தமிழகத்தைச் சேர்ந்த மூத்த வழக்குரைஞர் வி.மோகனா உள்பட ஐந்து புதிய நீதிபதிகள் நியமிக்கப்பட்டனர். இது தொடர்பான அறிவிக்கையை மத்திய சட்ட அமைச்சகம் வெளியிட்டது.

(i) புதிய நீதிபதிகள் பதவியேற்றதும், உச்சநீதிமன்றத்தில் பணியில் இருக்கும் நீதிபதிகளின் எண்ணிக்கை 37- ஆக உயரும்.

(ii) உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 34-ஆக இருந்த நிலையில், மத்திய அரசு கடந்த மாதம் அவசர திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்து, உச்சநீதிமன்ற நீதிபதிகளின் (தலைமை நீதிபதி உள்பட) எண்ணிக்கையை 38-ஆக உயர்த்தியது.

2. வரும் செப்டம்பரில் தொடங்கும் ஐ.நா. பொதுச் சபையின் 81-ஆவது கூட்டத் தொடருக்கான தலைவர் தேர்தல், செவ்வாய்க்கிழமை (ஜூன் 2) நடைபெறுகிறது.

(i) சுழற்சி அடிப்படையில், இந்த முறை ஆசிய-பசிபிக் பிராந்தியத்துக்கான தலைவர் பதவிக்கு, வங்கதேசம் மற்றும் சைப்ரஸ் நாடுகள் இடையே கடுமையான போட்டி நிலவுகிறது. தேர்தலில் வெற்றி பெறுபவர், தற்போதைய தலைவரும் ஜெர்மனியின் முன்னாள் வெளியுறவு அமைச்சருமான அனலெனா பேர்பாக்கிற்குப் பிறகு, ஓராண்டுக்கு இப்பதவியை வகிப்பார்.

(ii) வங்கதேசம் சார்பில் அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் கலிலூர் ரஹ்மான் இத்தேர்தலில் களம் காண்கிறார். முகமது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசில் தேசிய பாதுகாப்பு ஆலோசகராகப் பணியாற்றிய இவர், கடந்த பிப்ரவரியில் வெளியுறவு அமைச்சராகப் பொறுப்பேற்றார். இவர் வென்றால், 1986-இல் ஹுமாயூன் ரஷீத் செளத்ரிக்கு அடுத்தபடியாக ஐ.நா. பொதுச் சபை தலைவராகும் 2-ஆவது வங்கதேசத்தவர் என்ற பெருமையைப் பெறுவார்.

(iii) அதேநேரம், சைப்ரஸ் சார்பில் அந்நாட்டின் பன்முகத்தன்மைக்கான சிறப்புத் தூதர் ஆண்ட்ரியாஸ் காகூரிஸ் போட்டியிடுகிறார். அமெரிக்காவுக்கான சைப்ரஸ் தூதர் உள்பட 40 ஆண்டுகளுக்கும் மேலான தூதரக அனுபவம் கொண்ட இவர், வெற்றிபெற்றால் ஐ.நா.பொதுச்சபை தலைவராகும் முதல் சைப்ரஸ் குடிமகன் ஆவார்.

(iv) ஐ.நா. புதிய பொதுச் செயலரைத் தேர்ந்தெடுப்பதற்கான ஆயத்தப் பணிகளில் ஈடுபட்டுள்ள சூழலிலும், உலகெங்கும் தீவிரமடைந்து வரும் மோதல்கள் மற்றும் சர்வதேச அமைதியைக் காப்பதில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் நிலவும் பிளவுகளுக்கு மத்தியிலும் இத்தேர்தல் உற்றுநோக்கப்படுகிறது.

3. சிறார்களை இணையவழி ஆபத்துகளில் இருந்தும், தேவையற்ற உள்ளடக்கங்களில் இருந்தும் பாதுகாக்கும் நோக்கில், 16 வயதுக்குட்பட்ட சிறார்கள் சமூக ஊடக கணக்குகளைத் தொடங்குவதற்கும் பயன்படுத்துவதற்கும் மலேசிய அரசு தடை விதித்துள்ளது.

(i) ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம், டிக்டாக், யூடியூப் உள்ளிட்ட 80 லட்சத்துக்கும் அதிகமான பயனர்களைக் கொண்ட முன்னணி சமூக ஊடக நிறுவனங்கள் அனைத்தும் இந்த விதியை உடனடியாக நடைமுறைப்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

(ii) மலேசிய அரசின் அறிவிக்கையின்படி, புதிய கணக்குகளைத் தொடங்கும் சிறார்களின் வயதை உறுதி செய்ய அரசு அங்கீகரித்த அடையாள அட்டைகளைச் சரிபார்ப்பது கட்டாயமாகும். மேலும், ஏற்கெனவே கணக்கு வைத்துள்ள சிறார்களைக் கண்டறிந்து இத்தடையை அமல்படுத்த சமூக ஊடக நிறுவனங்களுக்கு 6 மாதங்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

(iii) இந்த விதிகளுக்கு இணங்கத் தவறும் மற்றும் தகுந்த வயது சரிபார்ப்பு முறைகளைச் செயல்படுத்தாத சமூக ஊடக நிறுவனங்களுக்கு 1 கோடி ரிங்கிட் (இந்திய மதிப்பில் சுமார் ரூ.24.01 கோடி) வரை அபராதம் விதிக்கப்படும்.

(iv) அதேநேரம், தடையை மீறி அல்லது ஏமாற்றி சிறார்கள் கணக்குகளைத் தொடங்கினால், அதற்காக அவர்களின் பெற்றோருக்கு எந்தவிதமான அபராதமோ அல்லது தண்டனையோ விதிக்கப்படாது என்றும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

(v) அரசின் இந்த அதிரடி நடவடிக்கைக்குப் பெற்றோர், சமூக ஆர்வலர்களிடையே கலவையான விமர்சனங்கள் எழுந்துள்ளன. பல பெற்றோர் இம்முடிவை வரவேற்றுள்ளதோடு, இது தங்களின் பிள்ளைகளை சமூக ஊடக அடிமைத்தனத்தில் இருந்தும், மனநலப் பாதிப்புகளில் இருந்தும் பாதுகாக்கும் என்று நம்புகின்றனர்.

(vi) எனினும், கல்வி மற்றும் ஆக்கபூர்வமான தேவைகளுக்காக யூடியூப் போன்ற தளங்களைப் பயன்படுத்தும் சிறார்களை இது பாதிக்கும் என்றும், அடையாள அட்டைகளைச் சரிபார்ப்பதால் பயனர்களின் தரவுத் தனியுரிமைக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்றும் மற்றொரு தரப்பினர் கவலை தெரிவித்துள்ளனர்.

(vii) சமூக ஊடகங்களால் சிறார்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்த கவலையில் ஆஸ்திரேலியா, பிரேஸில், இந்தோனேசியா போன்ற நாடுகள் ஏற்கெனவே கட்டுப்பாடுகளை அறிவித்துள்ள நிலையில், பிரிட்டன், பிரான்ஸ், தென் கொரியா உள்ளிட்ட பல நாடுகளும் இத்தகைய சட்டங்களைக் கொண்டுவரத் திட்டமிட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

4. தென் அமெரிக்க நாடான கொலம்பியாவில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் நேரடி வெற்றி அடைய 50 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறாததால், முன்னணி வேட்பாளர்களான வலதுசாரித் தலைவர் அபெலார்டோடி லா எஸ்பிரியெல்லா, இடது சாரித் தலைவர் இவான்செபெடா ஆகியோர் 2-ஆம் கட்டத் தேர்தலை எதிர்கொள்ள உள்ளனர்.

(i) அபெலார்டோ டி லா எஸ்பிரி யெல்லா 44.2 சதவீத வாக்குகளுடன் முன்னிலையில் உள்ள நிலையில், இவான் செபெடா 41 சதவீத வாக்குகளைப் பெற்று கடும் நெருக்கடி அளித்துள்ளார்.

(ii) முதல் இரண்டு இடங்களைப்பிடித்த இவ்விருவேட்பாளர்களுக்கும் இடையே இறுதிச் சுற்றான 2-ஆம் கட்ட வாக்குப்பதிவு வரும் 21-ஆம் தேதி நடை பெறவுள்ளது.

5. இந்தியாவின் தொழில் துறை உற்பத்தி (ஐஐபி) வளர்ச்சி கடந்த ஏப்ரல் மாதத்தில் 4.9 சதவீதமாக குறைந்துள்ளது.

(i) கடந்த ஆண்டு ஏப்ரலில் இந்த வளர்ச்சி 5.7 சதவீதமாக இருந்த நிலையில், மத்திய கிழக்கு போர்ச் சூழல் காரணமாக எரிசக்தி துறையில் ஏற்பட்ட மந்தநிலையால் நடப்பு ஆண்டு வளர்ச்சி குறைந்துள்ளது.

(ii) துறை வாரியாக, உற்பத்தித் துறை 6.2 சதவீதமும், மின்சாரம் மற்றும் எரிவாயு விநியோகத் துறை 4.9 சதவீதமும், குடிநீர் விநியோகம் மற்றும் கழிவு மேலாண்மைத் துறை 6.6 சதவீதமும் வளர்ச்சி பெற்றுள்ளன. அதேநேரம், சுரங்கம் மற்றும் குவாரித் துறை 5.1 சதவீத வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது பின்னடைவாகக் கருதப்படுகிறது.

(iii) தொழில் துறை உற்பத்திக் குறியீட்டின் (ஐஐபி) அடிப்படை ஆண்டை 2011-12-லிருந்து 2022-23-ஆக மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் மாற்றியமைத்துள்ளது.

(iv) தொழில்துறை உற்பத்தியை மிகவும் துல்லியமாகவும், தற்கால பொருளாதாரச் சூழலுக்கு ஏற்பவும் மதிப்பிடுவதற்காக அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின்படி இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அடிப்படை ஆண்டு மாற்றத்துக்குப் பிறகு வெளியிடப்பட்டுள்ள முதல் அதிகார பூர்வ தரவு இதுவாகும்.

(v) புதிய மாற்றங்களின்படி, தொழில் துறை உற்பத்திக் குறியீட்டுப் பட்டியலில் தற்கால நுகர்வுக்கு ஏற்ப 120 புதிய பொருள்கள் சேர்க்கப்பட்டுள்ளன; அதேநேரம் பயன்பாடு குறைந்த 64 பொருள்கள் நீக்கப்பட்டுள்ளன. அதன்படி, சிசிடிவி கேமராக்கள், கிரெடிட், டெபிட் கார்டுகள், மருத்துவ ஸ்டெண்டுகள், தடுப்பூசிகள், விமானம், விண்கலப் பாகங்கள் ஆகியவை புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

(vi) சந்தையில் நுகர்வு குறைந்ததன் காரணமாக மண்ணெண்ணெய், சிஎஃப்எல் விளக்குகள், தையல் மற்றும் அச்சு இயந்திரங்கள் போன்ற பொருள்கள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

(vii) இதன்மூலம், தற்போது இப்பட்டியலில் 463 பிரிவுகளின்கீழ் 1,042 பொருள்கள் இடம்பெற்றுள்ளன. இந்த விரிவான மாற்றங்கள் இந்தியாவின் தொழில் துறையில் ஏற்பட்டுள்ள பன்முகத்தன்மையையும், புதிய தொழில்நுட்பங்களின் வருகையையும் துல்லியமாகப் பிரதிபலிக்கும். மேலும், புதுப்பிக்கத்தக்க மற்றும் புதுப்பிக்க இயலாத எரிசக்தி மூலம் மின்சாரம் தயாரித்தல் போன்ற விவரங்களும் இனி தனித்தனி குறியீடுகள் மூலம் துல்லியமாகக் கண்காணிக்கப்படும்.

(viii) இனிவரும் காலங்களில், ஒவ்வொரு மாதமும் முடிவடைந்த 28 நாள்களுக்குள் அந்த மாதத்துக்கான தரவுகள் தொடர்ந்து வெளியிடப்படும் என்று அமைச்சகம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

6. இந்தியா-ஆஸ்திரேலியா இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

(i) இந்தியா வந்துள்ள ஆஸ்திரேலிய துணைப் பிரதமர் ரிச்சர்டு மார்லஸ் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கை சந்தித்தார்.

(ii) அப்போது இரு நாடுகளிடையே பாதுகாப்பு ஒத்துழைப்பு அதிகரிப்பு, மேற்காசிய

பதற்றத்தால் எரிசக்தி விநியோகத்தில் ஏற்பட்டுள்ள இடையூறுகள், இந்தோ-பசிபிக் கடற்பகுதியில் சீனாவின் ஆதிக்கம், தடையற்ற கடல் வர்த்தகம் ஆகிய விவகாரங்கள் குறித்து இருவரும் ஆலோசித்தனர். இதுதொடர்பாக இரு நாடுகளும் வெளியிட்ட கூட்டறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

- சுதந்திரமான, அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையுடன் கூடிய வளமையான இந்தோ-பசிபிக் பிராந்தியத்தை பிற நாடுகளுடன் இணைந்து கட்டமைக்க அமைச்சர் ராஜ்நாத் சிங்கும், ஆஸ்திரேலிய துணைப் பிரதமர் ரிச்சர்டு மார்லஸும் உறுதி பூண்டனர்.
- இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா இடையே பாதுகாப்பு தொழில் துறை ஒத்துழைப்பை மேம்படுத்த அவர்கள் ஒப்புக்கொண்டனர். ஒருங்கிணைந்த கடல்சார் பாதுகாப்பு வியூக திட்டத்தை இறுதி செய்வது தொடர்பாக இருவரும் ஆலோசனை மேற்கொண்டனர்.
- கடல்சார் வர்த்தகம் மற்றும் வான் எல்லையில் விமானம் இயக்குவது உள்பட ஐ.நா.கடல்சார் சட்டம், 1982-ஐ பிற நாடுகள் முறையாகப் பின்பற்ற அவர்கள் ஆதரவு தெரிவித்தனர். ஆஸ்திரேலியாவின் முதல் பாதுகாப்பு வர்த்தக குழு இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்வதை அவர்கள் வரவேற்றனர்.
- இந்தோ-பசிபிக் பிராந்தியத்தின் பாதுகாப்பில் இந்தியா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து செயல்படுவதற்கும் வரவேற்பு தெரிவித்தனர்.
- இந்தோ-பசிபிக் கடல்சார் கண்காணிப்பு முன்னெடுப்பு ஒத்துழைப்பை அமல்படுத்த இருவரும் ஆதரவளித்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
- ஆலோசனைக்குப் பிறகு இந்தியா-ஆஸ்திரேலியா இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்ளும் பணிகள் தொடங்கும் என ராஜ்நாத் சிங்கும் ரிச்சர்டு மார்லஸும் அறிவித்தனர்.

7.இந்தியா - ஓமன் நாட்டுக்கு இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் முதல் அமலுக்கு வந்துள்ளது என்று மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்தார்.

(i) ஓமன் தலைநகர் மஸ்கட்டில் கடந்த 2025-ஆம் ஆண்டு டிசம்பர் 18-ஆம் தேதி இந்த தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையொப்பமான நிலையில், தற்போது நடைமுறைக்கு வந்துள்ளது.

(ii) வேளாண் ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்ததைக் குறிக்கும் வகையில், சென்னை, மும்பை, கொல்கத்தாவிலிருந்து பொருள்கள், ரத்தினங்கள், ஆபரணங்கள் உள்ளிட்ட 10 சரக்குகள் வரிச் சலுகையின் கீழ் கப்பல் மூலம் ஓமனுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

(iii) இதுகுறித்து தில்லியில் செய்தியாளர்களை சந்தித்த பியூஷ் கோயல் கூறுகையில், 'இந்தியா - ஓமன் இடையேயான விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்துள்ளது. இதன்மூலம் ஜவுளி, தோல், நெகிழிப் பொருள்கள், கடல்சார் பொருள்கள், வாகனங்கள், விளையாட்டு பொருள்கள், வேளாண் பொருள்கள் உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்த இந்திய ஏற்றுமதியாளர்கள், தங்களின் போட்டியாளர்களைக் காட்டிலும் ஓமன் நாட்டின் சந்தைகளில் முன்னுரிமை அணுகலைப் பெற்று பலனடைவர்' என்றார்.

(iv) இந்த ஒப்பந்தத்தின் கீழ், பேரீச்சம்பழ இறக்குமதிகளுக்கு ஒதுக்கீடு அடிப்படையில் வரிச் சலுகையை ஓமன் அளிக்கும் என்பதால், இந்திய நுகர்வோருக்கு மலிவான ஓமன் பேரீச்சம்பழங்கள் கிடைக்கும். மேலும், ஓமனிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கான மொத்த வரி இனங்களில், 77.79 தவீதத்துக்கு சுங்க வரிச் சலுகைகளை இந்தியா வழங்கியுள்ளது.

(v) வளைகுடா பிராந்தியத்தில் இந்தியாவின் இரண்டாவது வர்த்தக கூட்டுறவு நாடாக ஓமன் திகழ்கிறது. இரு நாடுகளிடையேயான இருதரப்பு வர்த்தகம் 2024-25 நிதியாண்டில் ரூ.1 லட்சம் கோடியாக (10.61 பில்லியன் டாலர்) இருந்தது, 2025-26-ஆம் நிதியாண்டில் ரூ.1,06,000 கோடியாக உயர்ந்தது.

8. வெளிநாடுகளில் இருந்து இந்தியாவுக்கு 17 லட்சம் டன் யூரியா இறக்குமதி செய்ய 2-ஆவது சர்வதேச ஒப்பந்தப்புள்ளியை மத்திய அரசு கோரியுள்ளது.

(i) மேற்காசியாவில் சுமார் 3 மாதங்களாக நீடிக்கும் ஈரான், அமெரிக்கா-இஸ்ரேல் போரால் ஹோர்முஸ் நீரிணையில் கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கச்சா எண்ணெய், எரி வாயு, உரம் ஆகியவை அந்த நீரிணை வழியே கொண்டு வர முடியாமல் நடுக்கடலில் நிற்கின்றன.

(ii) இந்தச் சூழ்நிலையில், மேற்காசிய போர் நிலவரம் குறித்து ஆலோசிக்க தில்லியில் அமைச்சகங்களுக்கு இடையேயான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் மத்திய நிதியமைச்சக கூடுதல் செயலர் அபர்ணா சர்மா பேசியதாவது:

- மேற்காசிய போர் காரணமாக சர்வதேச சந்தையில், பிப்ரவரி மாதம் 447 டாலராக இருந்த ஒரு டன் யூரியா விலை தற்போது 947 டாலராக அதிகரித்துவிட்டது. எனினும், நமது நாடு 25 லட்சம் டன் யூரியா, 50 லட்சம் டன் டிஏபி உரத்தை வேறு பகுதியில் (மத்திய கிழக்கு நாடுகளிடம் அல்லாது) இருந்து வாங்கியுள்ளது. அவை ஜூன் - ஜூலை மாதம் இந்தியா வரலாம் என்று எதிர்பார்க்கிறோம்.
- இதேபோல் 17 லட்சம் டன் யூரியா இறக்குமதி செய்வது தொடர்பான சர்வதேச ஒப்பந்தப்புள்ளியையும் கோரியுள்ளது. காரீஃப் பருவத்துக்கான 2-ஆவது ஒப்பந்தப்புள்ளி இதுவாகும் என்றார் அவர்.

(iii) வெங்காய கையிருப்பை அதிகரிக்கும் நோக்கில் கொள்முதலை மத்திய அரசு அதிகரித்துள்ளது. வெங்காய கொள்முதல் விலை கிலோவுக்கு ரூ.12.70 என்பதில் இருந்து ரூ.15.80-ஆக உயர்த் தப்பட்டுள்ளதாக மத்திய உணவு மற்றும் நுகர்வோர் விவகாரத் துறை அமைச்சக கூடுதல் செயலர் அனுபம் மிஸ்ரா தெரிவித்தார்.

- சந்தையில் விலை ஏற்ற-இறக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக மத்திய அரசு வெங்காயத்தை கொள்முதல் செய்து பதப்படுத்தி வைப்பது வழக்கமாகும். இந்த ஆண்டு 2 லட்சம் டன் வெங்காயம் கொள்முதல் செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டு 3 லட்சம் டன்னாக இருந்தது.
- பருப்பு வகைகளைப் பொருத்தவரையில் முன்னெப்போதும் இல்லாத அளவாக 43 லட்சம் டன் இருப்பு உள்ளது. இது கடந்த ஆண்டு மே மாதத்தில் இருந்த கையிருப்பைவிட இருமடங்கு அதிகம். உள்நாட்டில் பருப்பு விளைச்சல் அதிகரித்துள்ளதால், 30 சதவீதம் அளவுக்கு இறக்குமதி

குறைந்துவிட்டது. முக்கியமாக கொண்டைக்கடலை இறக்குமதி 51 சதவீதம் குறைந்துள்ளது.

- மியான்மர், தான்சானியா, மலாவி, மொசாம்பிக், கனடா, ஆஸ்திரேலியா, பிரேசில் ஆகிய நாடுகளில் இருந்து இந்தியா பருப்பு இறக்குமதி செய்வது வழக்கம்' என்றும் அனுபம் மிஸ்ரா கூறினார்.

9. மியான்மர் குடியரசுத் தலைவரின் இந்தியப் பயணம்

(i) இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு எதிரான உறுதிமொழி

- இந்தியாவின் பாதுகாப்பு நலன்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவொரு நடவடிக்கைகளுக்கும் மியான்மர் தனது மண்ணைப் பயன்படுத்த அனுமதிக்காது என்று, மியான்மர் குடியரசுத் தலைவர் மின் ஆங் ஹ்லைங் (Min Aung Hlaing), பிரதமர் நரேந்திர மோடியிடம் உறுதியான உறுதிமொழியை அளித்தார்.
- இரு நாடுகளின் எல்லைகளும் ஒன்றுக்கொன்று எதிரான விரோத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதில் பரஸ்பர உறுதிப்பாட்டை இரு தலைவர்களும் மீண்டும் வலியுறுத்தினர்.

(ii) இப்பயணத்தின் பின்னணியும் முக்கியத்துவமும்

- ஜூன் 1-ஆம் தேதி தொடங்கி, ஐந்து நாள் அரசுமுறைப் பயணமாக குடியரசுத் தலைவர் புது தில்லிக்கு வருகை தந்தார்.
- மியான்மரின் பொதுத் தேர்தல்கள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, ஏப்ரல் 2026-இல் மின் ஆங் ஹ்லைங் அதிகாரப்பூர்வமாக குடியரசுத் தலைவர் பதவியை ஏற்ற சிறிது காலத்திலேயே இப்பயணம் அமைந்திருப்பதால், இது உத்திசார் ரீதியாக மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

(iii) இருதரப்பு மற்றும் உத்திசார் ஒத்துழைப்பு

- வர்த்தகம், பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகிய துறைகளில் உறவுகளை வலுப்படுத்துவது குறித்து உயர்மட்டப் பேச்சுவார்த்தைகளில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.
- சுகாதாரம், கல்வி, எரிசக்தி, தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) ஆகியவை மேம்படுத்தப்பட்ட ஒத்துழைப்புக்கான முக்கியத் துறைகளாக அடையாளம் காணப்பட்டன.
- எல்லை மேலாண்மை மற்றும் மியான்மருக்குள் இந்தியா உதவியுடன் செயல்படுத்தப்படும் பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்தும் இக்கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது.

(iv) இறையாண்மை மற்றும் எல்லைப் பாதுகாப்பு

- மியான்மரின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கு இந்தியாவின் உறுதியான ஆதரவு தொடரும் என்பதை பிரதமர் மோடி மீண்டும் உறுதிப்படுத்தினார்.
- நாகாலாந்து மற்றும் மணிப்பூர் போன்ற வடகிழக்கு இந்திய மாநிலங்களைத் தொட்டுச் செல்லும், இரு நாடுகளுக்கும் பொதுவான 1,640 கி.மீ. நீளமுள்ள எல்லையின் பாதுகாப்பு, இரு நாடுகளுக்கும் மிக உயர்ந்த முன்னுரிமையாகத் திகழ்கிறது.

- இருதரப்புப் பாதுகாப்பு உறவுகள் குறித்து, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், குடியரசுத் தலைவருடன் தனியாக விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்தினார்.

(v) மியான்மரின் உள்நாட்டு அமைதி குறித்த நிலைப்பாடு

- முன்னாள் பிரதமர் ஆங் சான் சூகி தொடர்பான சூழல் குறித்தும், மியான்மரில் அமைதியை மீட்டெடுப்பதற்கான தற்போதைய முயற்சிகள் குறித்தும் இரு தலைவர்களும் விவாதித்தனர்.
- மியான்மரில் நீண்டகால நிலைத்தன்மை ஏற்பட வேண்டுமெனில், தொடர்புடைய அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய பங்கேற்பு அவசியம் என்று இந்தியா கருதுகிறது.

10. வனவிலங்குகளால் ஏற்படும் சேதங்களுக்கான இழப்பீடு உயரும் எனத் தமிழக விவசாயிகள் எதிர்பார்ப்பு

(i) பிரச்சினையின் கண்ணோட்டம்

- தமிழகம் முழுவதும் உள்ள விவசாயிகள், யானைகள், காட்டுப்பன்றிகள், மான்கள், கரடிகள் மற்றும் மயில்கள் போன்ற வனவிலங்குகளால் ஏற்படும் தொடர் சவால்களையும், கணிசமான நிதி இழப்புகளையும் எதிர்கொண்டு வருகின்றனர்.
- மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரப் பகுதிகளுக்கு அருகில் விவசாய நிலங்களைக் கொண்ட விவசாயிகளுக்கே இப்பிரச்சினை மிகவும் தீவிரமாக உள்ளது.

(ii) விவசாயம் மற்றும் மனிதப் பாதுகாப்பின் மீதான தாக்கம்

- யானைகள் பெரும்பாலும் தென்னை மற்றும் வாழை போன்ற அதிக மதிப்புள்ள பயிர்களைச் சேதப்படுத்துகின்றன. பல பகுதிகளில், காட்டுப்பன்றிகள் மற்றும் மான்களால் ஏற்படும் தொடர் சேதங்கள் காரணமாக, விவசாயிகள் கிழங்கு வகைகள் மற்றும் நிலக்கடலை பயிரிடுவதையே கைவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.
- கரடிகள் மற்றும் காட்டுப்பன்றிகளுடனான மோதல்கள் பெரும்பாலும் கடுமையான உடல் காயங்களிலும், சில சமயங்களில் மனித உயிரிழப்புகளிலும் முடிவடைகின்றன.
- இத்தகைய தொடர் சேதங்கள் காரணமாக, மாதந்தோறும் நடைபெறும் குறைதீர்க்கும் கூட்டங்களில், காட்டுப்பன்றிகளைப் 'பாதுகாக்கப்பட்ட உயிரினங்கள்' பட்டியலிலிருந்து நீக்கவும், அவற்றைச் சுட்டு வீழ்த்த அனுமதி அளிக்கவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(iii) தற்போதைய இழப்பீட்டு நடைமுறையின் மீதான விமர்சனம்

- தற்போதைய இழப்பீட்டுத் தொகைகள் மிகக் குறைவாகவும், அற்பமானதாகவும் இருப்பதாகவும்; விதை, உரம் மற்றும் தொழிலாளர் கூலி ஆகியவற்றின் உயர்ந்து வரும் செலவுகளைக் கணக்கில் கொள்ளத் தவறிவிட்டதாகவும் விவசாயிகள் வாதிடுகின்றனர்.
- மனித உயிரிழப்பு அல்லது நிரந்தர உடல் ஊனத்திற்கான இழப்பீட்டுத் தொகை 2024-ஆம் ஆண்டில் ₹4 லட்சத்திலிருந்து ₹10 லட்சமாக

உயர்த்தப்பட்டிருந்தாலும், மற்ற இழப்பீட்டு வகைகளுக்கான தொகைகள் காலாவதியானதாகவும், போதுமானதாக இல்லாமலும் இருப்பதாக விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

(iv) இழப்பீடு தொடர்பான குறிப்பிட்ட கோரிக்கைகள்

தற்போதைய பொருளாதாரச் சூழலுக்கு ஏற்றவாறு இழப்பீட்டு விகிதங்களை கணிசமாக உயர்த்துமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்:

- மனித உயிரிழப்பு/ஊனம்: ₹10 லட்சத்திலிருந்து ₹20 லட்சமாக உயர்த்துதல்.
- பொதுவான பயிர்ச் சேதம்: ஏக்கருக்கு ₹25,000-லிருந்து ₹50,000-ஆக உயர்த்துதல்.
- தென்னை மரங்கள்: ஒரு மரத்திற்கு ₹500-லிருந்து ₹10,000-ஆக உயர்த்துதல்.
- கான்கிரீட் வீடுகள்: ₹95,100-லிருந்து ₹4 லட்சமாக உயர்த்துதல்.
- குடிசைகள்/ஓலை வீடுகள்: ₹10,000-லிருந்து ₹1 லட்சமாக உயர்த்துதல்.
- கால்நடைகள்: பால் மாடுகளுக்கான இழப்பீட்டை ₹60,000-ஆகவும், எருதுகளுக்கு ₹50,000-ஆகவும், ஆடு/செம்மறி ஆடுகளுக்கு ₹15,000-ஆகவும் உயர்த்த வேண்டும் என்பவை இக்கோரிக்கைகளில் அடங்கும்.
- சொத்து மற்றும் உபகரணங்கள்: வீட்டு உபயோகப் பொருட்களுக்கு (₹5,000 வரை), கடைகளுக்கு (₹10,000 வரை) மற்றும் மோட்டார்கள், கிணறுகள் போன்ற பாசனக் கருவிகளுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு இழப்பீட்டுத் தொகையை அதிகரிக்கக் கோரப்பட்டுள்ளது.

(v) நிர்வாக முரண்பாடுகள் மற்றும் எதிர்கால எதிர்பார்ப்புகள்

- தற்போது வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை போதுமானதாக இல்லாததால், விவசாயிகளுக்கும் வனத்துறைக்கும் இடையே அடிக்கடி மோதல்கள் ஏற்படுகின்றன. வழங்கப்படும் குறைந்த இழப்பீட்டுத் தொகையை ஏற்க பல விவசாயிகள் மறுப்பதே இதற்குக் காரணமாகும்.
- பல ஆண்டுகளாகத் தொடர்ந்து கோரிக்கை விடுத்த போதிலும், பயனுள்ள தீர்வுகள் செயல்படுத்தப்படவில்லை. இழப்பீட்டுத் தொகையை அதிகரிப்பதன் மூலமும், காட்டு விலங்குகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் தங்களின் பாதுகாப்பு மற்றும் நிதி நிலைத்தன்மைக்கு முன்னுரிமை அளிக்குமாறு விவசாயிகள் இப்போது புதிய அரசை வலியுறுத்துகின்றனர்.